


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (26.09.2023) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள 1000க்கும் மேற்பட்ட திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு, அர்ச்சகர் பயிற்சி முடித்த பெண்கள், திருக்கோயில் ஓதுவார் பணியிடங்களுக்கு பெண்களும் தேர்வு செய்யப்பட்டு பணிநியமன ஆணைகள் வழங்கியது ஆகியவற்றை பாராட்டி முதலமைச்சர் அவர்கள் சமூக வலைதளங்களில் பதிவு வெளியிட்டமைக்காக, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கூ.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர்,. திருமதி ந. திருமகள், இணை ஆணையர்கள் திருமதி கி. ரேணுகாதேவி, திருமதி கோ. ஜெயப்பிரியா, திருமதி ஜெ. முல்லை, உதவி ஆணையர்கள் திருமதி தி.சு. ரோஜாலி சுமதா, அராஜா ஆகியோர் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

## டெங்கு-மழைக்கால நோய்கள் தடுப்பு நடவடிக்கை:

# அக்டோபர் 1 அன்று 1,000 சிறப்பு மருத்துவ முகாம்கள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

தேனி, செப்.28-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு முழுவதும் டெங்கு மற்றும் மழைக் கால நோய்கள் தடுப்பு நடவடிக்கைகளுக்கான 1,000 சிறப்பு மருத்துவ முகாம்கள் வருகிற அக்டோபர் மாதம் 1-ஆம் தேதி நடைபெறும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் தெரிவித்துள்ளார்.

தேனி மாவட்டத்தை சேர்ந்த வடிவேல் (வயது 43) அவர்கள் விபத்தில் மூளை சாவு அடைந்து அவர் உடல் உறுப்புகள் தானமாக வழங்கப்படுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, அவருக்கு அரசு மரியாதை செலுத்துவதற்காக தேனி மாவட்டம் செல்லும் வழியில் மதுரை விமான நிலையத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டில் தற்போது அதிக மழைப்பொழிவு காரணத்தினால் பருவமழை கால நோய்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக டெங்கு மற்றும் காய்ச்சல் அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக சற்று அதிகரித்து காணப்படுகிறது. மதுரை, திருநெல்வேலி, தென்காசி, தூத்துகுடி, காஞ்சிபுரம், திருவாரூர், கோவில்பட்டி, செய்யார், கடலூர், செங்கல்பட்டு, விழுப்புரம் போன்ற மாவட்டங்களில் அதிகரித்துள்ளது.

காய்ச்சல் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் அந்தந்த பகுதிகளிலேயே பொது மக்களுக்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டு தமிழகம் முழுவதும் அனைத்து இடங்களிலும் குறைந்தது 1000 காய்ச்சல் தடுப்பு மருத்துவ முகாம்கள் நடைபெற அறிவுறுத்தப்பட்டுள்ளது. மருத்துவ குழுவினர் தினந்தோறும் காய்ச்சல் பாதித்த இடங்களுக்குச் சென்று ஆங்காங்கே மருத்துவ சிகிச்சை முகாம்கள் நடத்த உள்ளனர். மேலும் இந்த முகாம்களில் பொதுமக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் பொருட்டு நிலவேம்பு குடிநீர் கஷாயம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் பொதுமக்களுக்கு காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் இந்த காய்ச்சல் முகாம்களுக்காக தமிழகத்தில் 476 நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஈடுபடுவார்கள்.

மேலும் 805 RBSK நடமாடும் பள்ளி மருத்துவ குழுக்கள் பள்ளிகளில் காய்ச்சல் கண்டறியும் முகாம் ஏற்படுத்தப்பட்டு அனைத்து பள்ளி மாணவ மாணவியர்களுக்கும் பரிசோதிக்கப்பட்டு காய்ச்சல் கண்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. தேவைப்படும் மாணவர்களுக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு காய்ச்சல் கண்ட மாணவர்களின் விவரத்தை உடனடியாக அருகில் உள்ள மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களுக்கு தெரிவிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தவிர பள்ளி வளாகங்களில் ஏடீஸ் கொசுக்கள் வளராமல் தடுக்க கொசுப்புழு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் புகை மருந்து அடிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அனைத்து சத்துணவு மையங்களிலும் உள்ள குழந்தைகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்யவும் சத்துணவு மையங்களிலும் கொசு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் அச்சமின்றி காய்ச்சல் ஏற்பட்டவுடன் உடனடியாக அருகில் உள்ள காய்ச்சல் தடுப்பு முகாம்களுக்கு சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

காய்ச்சல் உள்ளவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு சென்று சிகிச்சை மேற்கொள்ளவும், சுய சிகிச்சை மேற்கொள்ள வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்படுகிறார்கள் என்று தெரிவித்தார்.

## செஞ்சி தொகுதி மேல்மலையனூர் ஒன்றியத்தில்

# புதிய பள்ளிக் கட்டிடங்கள் திறப்பு விழா!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் பங்கேற்பு!

செஞ்சி செப்28-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ,மயிலம், திண்டிவனம், ஆகிய தொகுதிகளில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட புதிய பள்ளி கட்டிடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளி காட்சிவாயிலாக திறந்து வைத்தார்.

இதை அடுத்து செஞ்சி தொகுதிமேல்மலையனூர் ஒன்றியம் மேல்மலையனூர் தொரப்பாடி வேட்டைக்காரன் பட்டி ஆகிய ஊராட்சிகளில் முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்ட புதிய பள்ளி கட்டிட வகுப்பறையில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு தொடங்கி வைத்து வகுப்பறையில் வரையப்பட்ட ஓவியங்களை பார்வையிட்டார். தொடர்ந்துபள்ளி மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் அவர் இனிப்புகளை வழங்கினார்.

அப்போது நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

கிராமத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்ற அரசுதான் தி.மு.க. அரசு அந்த வகையில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மகன் தளபதி மு.க.ஸ்டாலின் தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் கிராமங்கள் தன் நிறைவு பெறும் வகையில் கிராம சாலைகள் திட்டம்,பள்ளி கட்டிடங்கள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள்கட்டப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் குழந்தைகளுக்கு பாதுகாப்புக்கான பள்ளி கட்டிடங்கள் கட்டப்பட்டு முதல மைச்சர் காணொளி வாயிலாக திறந்து வைத்துள்ளார்.

கிராமத்தில் படிக்கும்குழந்தைகளுக்கு காலை உணவு திட்டத்தை ஏற்படுத்தி ஒரு தாய்க்கு தாயாக முதலமைச்சர் செயல்பட்டு வருகிறார் .

பெண் பிள்ளைகள் படித்தால் தான் கிரா மத்தின் வளர்ச்சி சமுதாயத்தின் வளர்ச்சி என்றும் இதற்காகத்தான் புதுமைப் பெண் திட்டத்தை முதலமைச்சர் அறிவித்து மேல்படிப்பு படிக்கும் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருவதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன்,ட் ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன் ,மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் செல்வகுமார்வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குலோ த்துங்கன், சரவணகுமார், ஒன்றிய பொறியாளர் நாராயணசாமி ஒன்றிய கவுன்சிலர்கள் கலா நாராயணமூர்த்தி, ராஜா, பெருமாள்,ரவிச்சந்திரன்,ஜெயலட்சுமி தக்ஷிணாமூர்த்தி, வட்டார கல்வி அலுவலர்கள் பிரகாஷ், வெங்கடேசன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெயச்சந்திரன், வட்டார மேற்பார்வையாளர் ஜமுனா, ஊராட்சி மன்ற தலைவர்கள் வெங்கடேசன், முனியம்மாள் துரைமுருகன், விஜயலட்சுமி ஜெயக்குமார், , நிர்வாகிகள் உதயகுமார், சரவணன், ரகுராமன், தாஹிரா,எஸ்.பி. சம்பத், ஜி.பி.எஸ். முருகன், ராம சரவணன்,தோப்பு சம்பத்,வெங்கடேசன், இளைஞரணி மணிகண்டன், மாணவரணி ஆறுமுகம்,விவசாய அணி பழனி மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், தி.மு.க. நிர்வாகிகள், ஊர் பொது மக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 10 மாற்றுத்திறனாளிகளுக்கு சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ. பெட்ரோல் இருசக்கர வாகனங்களை வழங்கினார். பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் சபா.பாலமுருகன், மாற்றுத்திறனாளிகள் கண்காணிப்பாளர் சுந்தரவடிவேல், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவஞானசுந்தரம், சக்தி. இராமச்சந்திரன், ஒன்றியச் செயலாளர் மு.குணசேகரன், ஜெகந்நாதன், செல்வக்குமார், வீர இராமச்சந்திரன், இந்திராநகர் ஜோதி, ஏழுமலை, ஊராட்சி மன்ற துணை தலைவர் ஜெ.சடையப்பன், வெங்கடேசன், நன்மாறப்பாண்டியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு!

திண்டுக்கல் மேற்கு மாவட்டம், ஒட்டன்சத்திரம் வடக்கு ஒன்றியம், சின்னக்காம்பட்டி கிளைக் கழகச் செயலாளர் ரா.மணி (எ) கிருஷ்ணசாமி அவர்கள் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டதால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 27.9.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலைஞர் தொலைக்காட்சியில் பள்ளிகளுக்கு இடையேயான “தமிழோடு விளையாடு” எனும் நிகழ்ச்சியை தியாகராயர் நகர் பென்ஸ் பார்க்கில் தொடங்கி வைத்தார். இசையமைப்பாளர் ஜேம்ஸ் வசந்தன் இந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். இதில் ”சாதிகளின் பெயரால், மதத்தின் பெயரால் அவரவர்களுக்கான மக்களை ஒருங்கிணைக்கும் முயற்சியில் பல்வேறு மாநிலங்களில் உள்ள பல்வேறு இயக்கங்கள் முயற்சி செய்தார்கள். செய்கின்றார்கள்! ஆனால் தமிழ்நாட்டில் திராவிட இயக்கம் மட்டுமே தமிழ் மொழியின் மூலம் தமிழர்களை ஒன்றிணைத்தது என்பதை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி எடுத்துரைத்தார்.

## ஆத்தூர் ஒன்றியம் எஸ்.பாறைப்பட்டியில் குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்க ரூ.3 கோடியே 13 லட்சத்தில்

# காமராஜர் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் கொண்டுவர உத்தரவு!

### அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு கிராம மக்கள் நன்றி!

சின்னாளபட்டி, செப்.28 -

ஆத்தூர் ஒன்றியம் எஸ். பாறைப்பட்டி கிராமத்தின் குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்க ரூ.3 கோடியே 13லட்சம் மதிப்பில் ஆத்தூர் காமராஜர் நீர் தேக்கப்பகுதியில் புதிய உறைகிணறுகள் அமைத்து குடிதண்ணீர் கொண்டுவர ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உத்தரவிட்டதற்கு கிராம மக்கள் கண்ணீர் மல்க பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஆத்தூர் ஒன்றியம் எஸ். பாறைப்பட்டி கிராமத்தில் எஸ்.பாறைப்பட்டி, வண்ணம்பட்டி, கே.ராமநாத புரம், கெற்புசோலைப் பட்டி,கென்டையம்பட்டி, எஸ்.பாறைப்பட்டி ஆதிதிராவிடர் காலனி ஆகிய கிராமங்கள் உள்ளன. இதில் சுமார் 7ஆயிரம் பேர் வசிக்கின்றனர். பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அமைக்கப்பட்ட குடி தண்ணீர் ஆழ்துளை கிணறுகள் மற்றும் குழாய்கள் தேசிய நான்குவழிச்சாலை பணியின்போது சேதமடைந்தன.

ஆழ்துளைக் கிணறுகளை பயன்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டதோடு பகிர்மான குழாய்கள் முற்றிலும் சேதமடைந்தன இதனால் மக்கள் குடிதண்ணீருக்காக கடும் அவதிப்பட்டனர். தங்கள் கிராமத்தில் உள்ள குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்க வேண்டுமென்று ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் எஸ். பாறைப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் பாலாஜி தலைமையில் ஊர் முக்கிய பிரமுகர்கள் கோரிக்கை விடுத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி ரூ.3.13கோடி மதிப்பில் ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்க அடிவாரப் பகுதியில் புதிய உறை கிணறு அமைக்கப்பட்டு அங்கிருந்து குழாய்கள் மூலம் 10கி.மீ தூரம் குடி தண்ணீர் கொண்டுவந்து எஸ்.பாறைப்பட்டி கிராமத்தில் 2 லட்சம் தண்ணீர் கொள்ளளவு உள்ள தரைத் தள தண்ணீர்; தொட்டி கட்டப்பட்டு 3 நீர் உந்து மோட்டார்கள் மூலம் எஸ். பாறைப்பட்டி ஊராட்சியில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் குடிதண்ணீர் விநியோகம் செய்ய உத்தரவிட்டுள்ளார்.

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமியின் இந்த அறிவிப்பு எஸ். பாறைப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த பொதுமக்களை பெரும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இதுகுறித்து ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கூறுகையில் ஆத்தூர் தொகுதி முழுவதும் மலைகிராமங்களை தவிர அனைத்து ஊராட்சிகளுக்கும் தங்குதடையின்றி குடிதண்ணீர் விநியோகம் செய்ய திராவிட மாடல் ஆட்சி நாயகன் கழகத்தலைவரும் தமிழக முதல்வருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவுபடி குடிதண்ணீர் திட்டங்கள் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் காவிரி கூட்டுக்குடிநீர் அனைத்து கிராமங்களுக்கும் செல்லும் வண்ணம் 198 மேல்நிலை தண்ணீர்; தொட்டிகள் கட்டப்பட உள்ளன. திண்டுக்கல், சின்னாளபட்டி, நிலக்கோட்டை, வத்தலக்குண்டு உட்பட அருகில் உள்ள பேரூராட்சிகளின் குடிதண்ணீர் தேவைக்காக வைகை அணையிலிருந்தும் குழாய்கள் மூலம் குடிதண்ணீர் கொண்டுவர திட்ட மிடப்பட்டுள்ளது. எஸ்.பாறைப்பட்டி ஊராட்சிக்கு ஆத்தூர்சட்டமன்றஉறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணறுகள் மற்றும் குடிதண்ணீர் தொட்டிகள் நான்குவழிச்சாலை விரிவாக்கத்தின் போது அப்புறப்படுத்தப்பட்டதால் அந்த கிராம மக்களின் தேவை உணர்ந்து ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்கத்திலிருந்து குடிதண்ணீர் கொண்டுவந்து விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் எஸ்.பாறைப்பட்டி கிராம மக்களின் குடிதண்ணீர் பூர்த்தியாகும் என்றார்.

# தேனி தெற்கு மாவட்ட மாணவர் அணி கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் என்.பிரகாஷ் வேண்டுகோள்!

தேனி. செப். 28 -

தேனி தெற்கு மாவட்டம் தி.மு.க. மாணவரணி அமைப்பாளர் என்.பிரகாஷ் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

தேனி தெற்கு மாவட்டம், ஒன்றியம், நகரம், பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல் நாளை (29.09.2023 - வெள்ளிக்கிழமை) மதியம் 2 மணி அளவில் கம்பம் நகரகழக அலுவலகத்தில் மாநில மாண வர் அணி துணை செயலாளர்கள் அதலை செந்தில் குமார், கோகுல், தேனி தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன், தேனி தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரகாஷ் ஆகியோர் தலைமையிலும் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள், பிரபாகரன், பகலவன், ‘சூர்யா, ரவிக்குமார், சத்யபிரபா ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

அதுசமயம் ஒன்றியம் நகரம் பேரூர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணபித்தவர்கள் இதில் கலந்து கொள்ளலாம் ஒவ்வொரு விண்ணப்பதாரர்களும் வயதை சரிபார்க்க கல்வி சான்றிதழ் வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அடையாள அட்டை, கட்சி உறுப்பினர் அட்டை கழகத்தில் இதற்கு முன் பணியாற்றிய ஆவணங்களை கொண்டு வர வேண்டும்..

இவ்வாறு தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் என்.பிரகாஷ் அறிக்கை விடுத்துள்ளார்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி கழக மாணவர் அணி மாநிலச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., ஆலோசனையின் பேரில் மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் மாநில இணைச் செயலாளர் பூவை ஜெரால்டு, மாநில துணைச் செயலாளர் திருமதி வீரமணி, மாணவரணி பொறுப்பாளர்கள் பதவிக்கு விண்ணப்பித்தவர்களிடம் நேர்காணல் நடத்திய போது எடுத்தபடம். உடன் தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உள்ளனர்